கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்), விழுப்புரம்.

முன்னிலை - திரு. S. ராஜசிம்மவர்மன், பி.ஏ, பி.எல் ( Hons),
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
(விரைவு நீதிமன்றம்),
விழுப்புரம்.

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ம் நாள் செவ்வாய்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056 தமிழ் விசுவாவசு ஆண்டு பங்குனி மாதம் 03 ம் நாள்
( முதல் நிலை பதிவேடு வழக்கு எண். 40/2025 )
( நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 2 , விழுப்புரம் )
( கண்டமங்கலம் காவல் நிலைய குற்ற எண். 600/2023 )

**அமர்வு வழக்கு எண் . 145 /2025**

**(CNR NO. TNVP 01 - 000172- 2025 )**

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசுக்காக | - | காவல் ஆய்வாளர், கண்டமங்கலம் காவல் நிலைய குற்ற எண். 600/2023 |
| 2. | குற்றம்சாட்டவர்கள் பெயர், வயது, வேலை, தந்தை பெயர் மற்றும் முகவரி | | அறிவழகன் (எ) அறிவு ( வயது 36/2023)<br>த/பெ.தாண்டவராயன்,<br>எண். 4/421 பெருமாள் கோவில் தெரு,<br>சின்னபாபு சமுத்திரம் கிராமம்,<br>விக்கிரவாண்டி தாலுக்கா,<br>விழுப்புரம் மாவட்டம். |
| 3. | சம்பவ நாள் | : | 22.12.2023 |
| 4. | புகார் நாள் | | 23.12.2023 |
| 5. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 23.12.2023 |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 6. | எதிரி பிணையில் சென்ற நாள் | : | எதிரி - 03.02.2024. |
| 7. | எதிரி மீதான குற்றச்சாட்டு | : | எதிரி மீது இதச பிரிவுகள். 341, 323, 397, 506(2) ன் கீழ் |
| 8. | எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | | எதிரி மீது இதச பிரிவுகள். 341, 323, 397, 506(2) ன் கீழ் . |
| 9. | எதிரியின் பதில் | | எதிரி மீதான இதச பிரிவுகள். 341, 323, 397, 506(2) ன் கீழ் குற்றவாளி அல்ல. |
| 10 | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | - | 08.09.2025 |
| 11. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | | 16.03.2026 |
| 12. | நீதிமன்றத்தின் தீர்மானம் | | எதிரி இதச பிரிவுகள் . 341, 323, 397, 506(2) ன் கீழ் குற்றவாளி அல்ல . |
| 13. | நீதிமன்றத்தின் தீர்ப்பும் தண்டனையும், | - | முடிவாக, எதிரி மீது இதச பிரிவுகள் . 341, 323, 397, 506(2) ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | | | பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு . 235 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறேன். இவ்வழக்கில் எதிரிக்கு ஏற்பட்டுள்ள பிணைமுறிகள் மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்புக்கு பின்னர் இரத்தாகும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 14. | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்கப்பட்ட நாள் | | எதிரி விடுதலை செய்யப்பட்டதால், தீர்ப்பின் நகல் வழங்கப்படவில்லை. |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | | இல்லை |

இந்த அமர்வு வழக்கானது என் முன்பாக 16.03..2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் திரு.இரா.சுப்பராயலு அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. D.S. செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**தீர்ப்புரை**

பெரியபாபு சமுத்திரம் கிராமம், ஆர்ச் கேட் அருகில் 22.12.2023 ம் தேதி இரவு சுமார் 07.00 மணியளவில் 1வது சாட்சியான தவசி (எ) சுரேந்தர் என்பவர் தனது இருசக்கர வாகனத்தில் ஆழியூரில் உள்ள தனது சித்தப்பா வீட்டிற்கு செல்ல வந்து கொண்டிருந்தபோது எதிரியாகிய அறிவழகன் சாட்சி.1யை வழிமறித்து டேய் பாக்கெட்டில் எவ்வளவு பணம் வச்சிருக்க எடுடா என மிரட்டியும், அதற்கு 1வது சாட்சி தன்னிடம் எதுவுமில்லை என்று கூறியதும், உடனே சாட்சி 1ன் கன்னத்தில் கையால் அறைந்து சாட்சி 1க்கு ஊமைக்காயத்தை ஏற்படுத்தியும், எதிரி சாட்சி. 1 யை பார்த்து நானே பெரிய ரவுடி என்னிடமே பொய் சொல்றியா என கூறிக்கொண்டே கையில் வைத்திருந்த சிறிய கத்தியை காட்டி மிரட்டி சாட்சி.1ன் பாக்கெட்டில் கையை விட்டு ரூ. 200 /- பணத்தை பிடுங்கி வழிப்பறி செய்தும், யாருகிட்டேயாவது போய் சொன்ன இந்த கத்தியாலேயே உன்ன குத்தி கொலை பண்ணிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தும் குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரியானவர் இதச பிரிவுகள். 341, 352, 397, 506(2) IPC- ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கண்டமங்கலம் காவல் ஆய்வாளர் அவர்களால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலித்த வகையில், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 அவர்கள் இந்த வழக்கை முதல் நிலை பதிவேடு வழக்கு எண். 40/2025 ஆக கோப்பிற்கு எடுத்து சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்களை கு.வி.மு.ச. பிரிவு. 207 - ன் கீழ் எதிரிக்கு இலவசமாக

வழங்கி, பிரிவு. 397- ன் படியான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கக்கூடியது என்பதால், கு.வி.மு.ச. பிரிவு. 209 (அ) ன் படி இவ்வழக்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளது. விழுப்புரம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அந்நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண். 145/ 2025 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிமன்ற உத்தரவு எண். **D.No. 5062/2025** நாள் **11.07.2025** தேதிய உத்தரவுபடி வழக்கு கோப்புகள் அனுப்பப்பட்டு 17.07.2025 அன்று இந்நீதிமன்றத்திற்கு வந்துள்ளது.

**3)** இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரி ஆஜரானவுடன், கற்றறிந்த கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் இந்த அமர்வு வழக்கை கு.வி.மு.ச. பிரிவு . 226 ன் கீழ் திறப்பு செய்தார். இவ்வழக்கில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைய அரசு தரப்பில் முக நோக்கு வழக்கு உள்ளது என முடிவு செய்து, எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் . 341, 352, 397, 506(2) ன் படியும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து அவற்றின் சாராம்சத்தை எதிரிக்கு தமிழில் விளக்கிக் கூறி வினவியபோது, எதிரி அவற்றை மறுத்து அவர் குற்றவாளி அல்ல என்று தெரிவித்ததால் இவ்வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

**4)** இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கவேண்டி அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா 5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில்

சான்று பொருட்கள் சா.பொ.1 கத்தி குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச. பிரிவு. 313(1) (ஆ) பிரிவின் கீழ் எதிரியிடம் விரிவாக விளக்கி வினவிய போது, எதிரி சாட்சியத்தை பொய் என மறுத்தார் . எதிரி தரப்பில் சாட்சிகள் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) இருதரப்பும் கேட்கப்பட்டது.

7) **அரசு தரப்பு சாட்சிய, சான்றாவணங்களில் இருந்து தெரியவரும் அரசு தரப்பின் விவரங்கள் பின்வருமாறு** :-

(i) அ.சா.1 திரு. சுரேந்தர் தனது சாட்சியத்தில், " தான் எஸ்.எம்.டி.புதிய ராகம் பேண்ட் இசைக்குழுவில் பேண்ட் வாசிக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றும், கடந்த 2023 ஆம் வருடம் ஒரு நாள் இரவு சுமார் 7.00 மணியளவில் நான் வேலைக்கு சென்று விட்டு, சின்ன பாபு சமுத்திரம் வழியாக இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது, சின்னபாபு சமுத்திரத்திலிருந்து ரசபுத்திர பாளையம் செல்லும் ரோட்டின் அருகில் போலீஸ்காரர் நிறுத்தி நீ எங்கு சென்று வருகிறாய் என்று கேட்டார்கள் என்றும், தான் விவரம் சொன்னேன் என்றும், அதற்காக எழுதாத ஒரு வெள்ளை தாளில் தன்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் எழுத்து மூலமான புகாரில் உள்ள கையெழுத்து

தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்தை தான் எழுதாத பேப்பரில்தான் போட்டேன் என்றும், வேறு ஒன்றும் தனக்குத் தெரியாது என்றும், இது சம்பந்தமாக அதன் பிறகு தன்னை போலீசார் விசாரணை செய்யவில்லை. அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 என்றும் " சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.2 திரு. அய்யனார் தனது சாட்சியத்தில், இந்த வழக்கின் புகார்தாரர் துளசி என்பவரை தெரியாது என்றும், ஆஜர் எதிரி தங்கள் ஊரை சேர்ந்தவர் ஆவார் என்றும், தனக்கு இந்த வழக்கை குறித்து எதுவும் தெரியாது என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக தன்னை காவல்துறையினர் விசாரணை செய்யவில்லை என்றும் " சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அ.சா. 3 திரு . நடராஜன் தனது சாட்சியத்தில், " தனக்கு இந்த வழக்கின் புகார்தாரர் துளசி என்பவரை தெரியாது என்றும், ஆஜர் எதிரி தங்கள் ஊரை சேர்ந்தவர் ஆவார் என்றும், எனக்கு இந்த வழக்கை குறித்து எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 1ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், தங்கள் ஊர் கோயில் அருகில் காவல்துறையினர் தன்னிடம் ஒரு எழுதாத வெள்ளை தாளில் இந்த கையெழுத்தை வாங்கினார்கள் என்றும், தன்னுடன் ஒரு ராஜேந்திரன் என்பவர் கையெழுத்து போட்டார் என்றும், மேற்படி பார்வை மகசரில் உள்ள 1ம் கையெழுத்து அ.சா.ஆ.2 என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக தன்னை காவல்துறையினர் விசாரணை எதுவும் செய்யவில்லை என்றும்," சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) அ.சா.4 திரு. தண்டபாணி தனது சாட்சியத்தில், " தனக்கு இந்த வழக்கின் புகார்தாரர் துளசி என்பவரை தெரியாது என்றும், ஆஜர் எதிரி தங்கள் ஊரை சேர்ந்தவர் ஆவார் என்றும், தனக்கு இந்த வழக்கை குறித்து எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், தங்கள் ஊர் கோயில் அருகில் காவல்துறையினர் தன்னிடம் ஒரு எழுதாத வெள்ளை தாள்களில் இந்த 2 கையெழுத்துக்களை வாங்கினார்கள் என்றும், தன்னுடன் மற்றும் ஒரு ஏழுமலை என்பவர் கையெழுத்து போட்டார் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ.3 என்றும், . கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ.4 என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக தன்னை காவல்துறையினர் விசாரணை எதுவும் செய்யவில்லை. என்றும்," சாட்சியம் அளித்துள்ளார்.

(v) அ..சா.5 திரு. நடராஜன் தனது சாட்சியத்தில், தான் தற்போது விழுப்புரம் மண்டலம் மத்திய நுண்ணறிவு பிரிவில் ( அமலாக்கம்) காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 2023 - ம் வருடம் விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தேன் என்றும், அப்போது வெள்ளத்தங்கம் என்பவர் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தார் என்றும், அவரது கையெழுத்து தனக்கு நன்கு பரிட்சயம் என்றும், கடந்த 23.12.2023 ம் தேதி அவர் நிலையத்தில் இருந்தபோது, விழுப்புரம் மாவட்டம் அற்புசம்பாளையம் கிராமத்தை சேர்ந்த நாகப்பன் மகன் தவசி என்கிற சுரேந்தர் நிலையம் ஆஜராகி கொடுத்துக்கொண்ட எழுத்து மூலமான புகாரை காலை 9.00 மணிக்கு பெற்று நிலைய குற்ற எண்.600/2023

இ.த.ச.பிரிவுகள் 341, 323, 397, 506(2) -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், அவர் பெற்ற புகார் அ.சா.ஆ.5 என்றும், அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 என்றும், அந்த புகாரில் மேற்படி நபர் 22/12/2023-ம் தேதி இரவு சுமார் 7.00 மணியளவில் இருசக்கர வாகனத்தில் வந்தபோது, சின்னபாபு சமுத்திரம் ஆர்ச் அருகில், பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த அறிவு என்கிற அறிவழகன் த/பெ.தாண்டவராயன், சின்னபாபு சமுத்திரம் என்பவர் வழிமறித்து கத்தியை காட்டி மிரட்டியும், கன்னத்தில் அறைந்தும், பாக்கெட்டில் இருந்த ரூ.200/-யை வழிப்பறி செய்ததாக சொல்லப்பட்டிருந்தது என்றும், மேற்படி புகாரையும், அச்சு முதல் தகவல் அறிக்கையும் சேர்த்து முறையாக நீதித்துறை நடுவர் எண்.2 விழுப்புரம் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். ஒரு பிரதியை மேலதிகாரிகளுக்கும், மற்றொரு பிரதியை விசாரணைக்காக தன் பார்வைக்கு வைத்ததை தான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, புகார்தாரர் சுரேந்தர், சம்பவ சாட்சி அய்யனார், மற்றும் ஒரு சாட்சி இராமமூர்த்தி ஆகியவர்களை விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சம்பவ இடம் சென்று சாட்சிகள் நடராஜன், ராஜேந்திரன், ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடம் குறித்து முடிவு செய்ய 23 ம் தேதி காலை 10.00 மணியளவில் ஒரு பார்வை மகசரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தேன் என்றும், பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், தான் தயார் செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.7 என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 என்றும், பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை தேட தன் ரகசிய புலனாளி தனக்குத் தந்த ரகசிய தகவலின் பேரில், அன்று மதியம் 1.00 மணியளவில்

சின்னபாபு சமுத்திரம் பஞ்சாயத்து அலுவலகம் அருகில் நின்றிருந்த எதிரி அறிவு என்கிற அறிவழகனை ரகசிய புலனாளி மற்றும் சாட்சி அடையாளம் காண்பிக்க காரணம் கூறி மதியம் 1.05 மணிக்கு கைது செய்தேன் என்றும், கைது விவரத்தை அவரது மனைவி மகேஸ்வரிக்கும், இலவச சட்ட அலுவலக வழக்கறிஞர் திரு.பிரேம்குமார் அவர்களுக்கு தெரியப்படுத்தினேன் என்றும், பின்பு சம்பவம் குறித்து அவரை(எதிரியை) விசாரணை செய்ய, அவர் எந்த வற்புறுத்தலும், துன்புறுத்தலும் இன்றி தானாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக் கொண்டார் என்றும், அதை சாட்சிகள் ஏழுமலை த/பெ.முனுசாமி, தண்டபாணி த/பெ.முருகேசன், ஆகியோர்கள் முன்னிலையில் அன்று 1 - 15 மணிக்கு பதிவு செய்தேன். பின்பு எதிரி, சாட்சிகளிடம் அதில் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால், சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9 என்றும், பின்பு மதியம் 2-10 மணியளவில் அதே சாட்சிகள் முன்னிலையில் பஞ்சாயத்து அலுவலகம் அருகில் இருந்து ஆஜர் செய்த ஒரு பச்சை, கருப்பு, சிமெண்ட் கலர் பேனா கத்தி ஒன்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.10 என்றும், அந்த கத்தியை பார்த்தால் தன்னால் அடையாளம் கூற முடியும் என்று சாட்சி கூறினார் என்றும், சாட்சி அதை சரியாக அடையாளம் காண்பித்தார் என்றும், அந்த கத்தி சா.பொ.1 என்றும், பின்பு எதிரி மற்றும் சான்று பொருளுடன் நிலையம் வந்து எதிரியை பாராவிடம் ஒப்புவித்து பின்பு உச்சநீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி

முறையாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்பு தன் விசாரணையில் புகார்தாரரின் கன்னத்தில் எதிரி அறைந்ததாக புகாரில் சொல்லப்பட்டிருந்தது என்றும், ஆனால் காயம் எதுவும் இல்லாததாலும், மருத்துவரிடம் சிகிச்சை எதுவும் பெறாததாலும், இ.த.ச. பிரிவுகள்,341, 323, 397, 506(2) -ல் இருந்து 341, 352, 397, 506(2) -ன் கீழ் ஒரு பிரிவு மாற்ற அறிக்கை தயார் செய்தேன் என்றும், அந்த பிரிவு மாற்ற அறிக்கை அ.சா.ஆ.11 என்றும், வழக்கு சொத்தினை படிவம் 95, மற்றும் அனைத்து ஆவணங்களையும், நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், மேற்படி படிவம் 95 அ.சா.ஆ.12 என்றும், உதவி ஆய்வாளர் திரு.வெள்ள தங்கம் என்பவர் விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பிறகு தன் விசாரணை முடித்து, எதிரி அறிவு என்கிற அறிவழகன் த/பெ.தாண்டவராயன் என்பவர் மீது இ.த.ச. பிரிவுகள் 341, 352, 397, 506(2) -ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், அத்துடன் மற்ற ஆவணங்கள் அனைத்தையும் முறையாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், தன் விசாரணையில் சாட்சி சுரேந்தர் தான் பாதிக்கப்பட்ட விவரத்தையும், காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துக் கொண்டது பற்றியும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும், சாட்சி அய்யனார் சுரேந்தருக்கு அனுசரனையாக சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக தான் தன் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும், சாட்சி நடராஜன் தான் சம்பவ இடம் சென்று பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தபோது உடனிருந்து தானும், ராஜேந்திரன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும், சாட்சி தண்டபாணி எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்த போதும், கைப்பற்றுதல் மகசர் தயார்

செய்த போதும், தானும், ஏழுமலையும், உடனிருந்து அவைகளில் கையொப்பம் செய்ததாக தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும் " சாட்சியம் அளித்துள்ளார்.

9) இருதரப்பு வாய்மொழி சாட்சியம் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாதுரைகளையும் ஆய்வு செய்ததில், இந்நீதிமன்றம் தீர்வு காண வேண்டிய பிரச்சனையாக கருதுவது என்னவெனில்,

(1) எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட இதச . பிரிவு .341, 323, 397, 506(2) ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

10) <u>பிரச்சனை எண். 1 -</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பு சாட்சிகள், இருதரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டன.

11) <u>அரசு தரப்பு வழக்கறிஞர் வாதத்தின் முக்கிய சாராம்சங்கள் -</u>

(i) இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், பெரியபாபு சமுத்திரம் கிராமம், ஆர்ச் கேட் அருகில் 22.12.2023 ம் தேதி இரவு சுமார் 07.00 மணியளவில் 1வது சாட்சியான தவசி (எ) சுரேந்தர் என்பவர் தனது இருசக்கர வாகனத்தில் ஆழியூரில் உள்ள தனது சித்தப்பா வீட்டிற்கு செல்ல வந்து

கொண்டிருந்தபோது எதிரியாகிய அறிவழகன் சாட்சி.1 யை வழிமறித்து டேய் பாக்கெட்டில் எவ்வளவு பணம் வச்சிருக்க எடுடா என மிரட்டியும், அதற்கு 1வது சாட்சி தன்னிடம் எதுவுமில்லை என்று கூறியதும், உடனே சாட்சி 1ன் கன்னத்தில் கையால் அறைந்து சாட்சி 1க்கு ஊமைக்காயத்தை ஏற்படுத்தியும், எதிரி சாட்சி. 1 யை பார்த்து நானே பெரிய ரவுடி என்னிடமே பொய் சொல்றியா என கூறிக்கொண்டே கையில் வைத்திருந்த சிறிய கத்தியை காட்டி மிரட்டி சாட்சி.1ன் பாக்கெட்டில் கையை விட்டு ரூ. 200 /- பணத்தை பிடுங்கி வழிப்பறி செய்தும், யாருக்கிட்டேயாவது போய் சொன்ன இந்த கத்தியாலேயே உன்ன குத்தி கொலை பண்ணிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தும் குற்றம் புரிந்துள்ளார் என்றும், எனவே எதிரியானவர் இதச , பிரிவுகள். 341, 352, 397, 506(2) IPC-வின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என்றும் ,

(ii) மேலும் இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் , இந்த வழக்கில் முக்கிய சாட்சிகள் அ.சா.1 சுரேந்தர் , அ.சா.2 அய்யனார், , அ.சா.3 நடராஜன், அ.சா.4 தண்டபாணி ஆகியோர்கள் பிறழ்சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்து இருந்தாலும், அ.சா. 5 நடராஜன் காவல் துறை அதிகாரியின் சாட்சியத்தின் மூலம், அரசு தரப்பு சாட்சிகளின் மூலமும், எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் உறுதிபடுத்தப்பட்டுள்ளது என்றும். எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சங்கிலி தொடர் போல் அமைந்துள்ளது என்றும், அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை

உறுதிபடுத்துகிறது என்றும், எனவே **எதிரியை இதச பிரிவுகள்** .341, 352, 397, 506(2) **ன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு தண்டிக்க வேண்டும்** என்றும் வாதிட்டார்.

**12) எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதத்தின் முக்கிய சாராம்சங்கள் -**

இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் பிறழ்சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், பார்வை மகசர் சாட்சி, கைப்பற்றுதல் மகசர் சாட்சி இருவரும் பிறழ்சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், இந்த சங்கதி அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே அமைந்துள்ளது என்றும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா. 4 வரையிலான சாட்சிகள் தங்களது விசாரணையில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே அமைந்துள்ளது என்றும், எனவே அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் மூலமும் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களின் மூலமும், சான்று பொருட்கள் மூலமும், எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உறுதி செய்யப்படவில்லை என்றும், எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**13) இருதரப்பு வாதுரைகளின் அடிப்படையில் இந்த வழக்கை கவனத்துடன் பரிசீலித்து பார்க்கும்போது, இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் புகார்தாரரின் சாட்சியத்தின் மூலமும், கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியத்தின் மூலமும், பார்வை மகசர் சாட்சி, புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் மூலமும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதை**

குறித்து பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் ஆகும். அதே போல , குற்ற நோக்கம், சம்பவயிடம், அரசு தரப்பில் நிரூபணம் செயய்ப்பட்டுள்ளதா? என்பதை குறித்தும் பரிசீலிக்க வேண்டியது அவசியம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14) <u>புகார்தாரர் , கண்ணுற்ற சாட்சிகள் ஆகியோர்களின் சாட்சியங்களின் அடிப்படையில் 1ம் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?</u>**

(i) இந்த வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 ஆக சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான சுரேந்தர் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார் . அவர் தனது சாட்சியத்தின் முதல் விசாரணையில்,

> " தான் எஸ்.எம்.டி.புதிய ராகம் பேண்ட் இசைக்குழுவில் பேண்ட் வாசிக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றும், கடந்த 2023 ஆம் வருடம் ஒரு நாள் இரவு சுமார் 7.00 மணியளவில் நான் வேலைக்கு சென்று விட்டு, சின்ன பாபு சமுத்திரம் வழியாக இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது, சின்னபாபு சமுத்திரத்திலிருந்து ரசபுத்திர பாளையம் செல்லும் ரோட்டின் அருகில் போலீஸ்காரர் நிறுத்தி நீ எங்கு சென்று வருகிறாய் என்று கேட்டார்கள் என்றும், தான் விவரம் சொன்னேன் என்றும், அதற்காக எழுதாத ஒரு வெள்ளை தாளில் தன்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் எழுத்து மூலமான புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்தை தான் எழுதாத பேப்பரில்தான் போட்டேன் என்றும், வேறு ஒன்றும் தனக்குத் தெரியாது என்றும், இது சம்பந்தமாக அதன் பிறகு

தன்னை போலீசார் விசாரணை செய்யவில்லை. அந்த கையெழுத்து மட்டும்

அ.சா.ஆ.1 என்றும் ”

சாட்சியம் அளித்து பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்.

(ii) இந்த வழக்கில் அ.சா.2 ஆக சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக அரசு தரப்பில் காண்பிக்கப்பட்டுள்ள அய்யனார் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தின் முதல் விசாரணையில்,

" இந்த வழக்கின் புகார்தாரர் துளசி என்பவரை தெரியாது என்றும், ஆஜர் எதிரி தங்கள் ஊரை சேர்ந்தவர் ஆவார் என்றும், தனக்கு இந்த வழக்கை குறித்து எதுவும் தெரியாது என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக தன்னை காவல்துறையினர் விசாரணை செய்யவில்லை என்றும் ” சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1, அ.சா.2 இருவரின் சாட்சியமும் மிக முக்கியத்துவம் வாய்ந்த சாட்சிகள் ஆகும் , அ.சா.1 புகார்தாரர் மற்றும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர் ஆவார். அ.சா.2 கண்ணுற்ற சாட்சி ஆவார். மேற்படி புகார்தாரர் அ.சா.1 தனது சாட்சியத்தில் எழுதாத ஒரு வெள்ளை தாளில் தன்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் எழுத்து மூலமான புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்தை தான் எழுதாத பேப்பரில்தான் போட்டேன் என்றும், வேறு ஒன்றும் தனக்குத் தெரியாது என்றும், சாட்சியம் அளித்துள்ளார். இந்த சங்கதி அரசு தரப்பு வழக்கை முற்றிலும் பாதிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 அய்யனார் தனது சாட்சியத்தில் " வழக்கு குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்து பிறழ்சாட்சியாக மாறியுள்ளது " அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

(iii) இந்த வழக்கில் மேற்படி முக்கிய சாட்சிகளான புகார்தாரர் ( அ.சா.1 ) கண்ணுற்ற சாட்சி அ.சா.2 ஆகியோர்பிறழ்சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளது அரசுதரப்பு வழக்கை பாதிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. எனவே புகார்தாரர்,, கண்ணுற்ற சாட்சிகள் ஆகியோர்களின் சாட்சியங்களின் மூலமும், எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**15) பார்வை மகசர் , ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் மூலம் அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?**

(i) இந்த வழக்கில் அ.சா.3 ஆக பார்வை மகசர் சாட்சி நடராஜன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் ,

" தனக்கு இந்த வழக்கின் புகார்தாரர் துளசி என்பவரை தெரியாது என்றும், ஆஜர் எதிரி தங்கள் ஊரை சேர்ந்தவர் ஆவார் என்றும், எனக்கு இந்த வழக்கை குறித்து எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 1ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், எங்கள் ஊர் கோயில் அருகில் காவல்துறையினர் தன்னிடம் ஒரு எழுதாத வெள்ளை தாளில் இந்த கையெழுத்தை வாங்கினார்கள் என்றும், தன்னுடன் மற்றும் ஒரு ராஜேந்திரன் என்பவர் கையெழுத்து போட்டார் என்றும், மேற்படி பார்வை மகசரில் உள்ள 1ம் கையெழுத்து அ.சா.ஆ.2 என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக தன்னை காவல்துறையினர் விசாரணை எதுவும் செய்யவில்லை என்றும்,"

சாட்சியம் அளித்து பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்.

(ii) இந்த வழக்கில் அ.சா.4 ஆக கைப்பற்றுதல் மகசர் சாட்சி தண்டபாணி என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் ,

" தனக்கு இந்த வழக்கின் புகார்தாரர் துளசி என்பவரை தெரியாது என்றும், ஆஜர் எதிரி தங்கள் ஊரை சேர்ந்தவர் ஆவார் என்றும், தனக்கு இந்த வழக்கை குறித்து எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், தங்கள் ஊர் கோயில் அருகில் காவல்துறையினர் தன்னிடம் ஒரு எழுதாத வெள்ளை தாள்களில் இந்த 2 கையெழுத்துக்களை வாங்கினார்கள் என்றும், தன்னுடன் மற்றும் ஒரு ஏழுமலை என்பவர் கையெழுத்து போட்டார் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ.3 என்றும், . கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ.4 என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக தன்னை காவல்துறையினர் விசாரணை எதுவும் செய்யவில்லை. என்றும்,

" சாட்சியம் அளித்து பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்.

(iii) மேற்படி அ.சா.3, அ.சா. 4 ஆகியோர் பிறழ்சாட்சிகளாக மாறியுள்ள நிலையில் இந்த வழக்கில் பார்வை மகசர் , கைப்பற்றுதல் மகசர் ஆகியவை அரசு தரப்பு சாட்சியத்தின் மூலம் உறுதிபடுத்தப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே அதன் அடிப்படையில் இந்த வழக்கில்

பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளின் மூலம், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**16 ) புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் மூலம் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உறுதிபடுத்தப்பட்டுள்ளதா?**

(i) இந்த வழக்கில் அ.சா.5 ஆக புலன் விசாரணை அதிகாரி திரு. நடராஜன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தின் முதல் விசாரணையில்,

" தான் தற்போது விழுப்புரம் மண்டலம் மத்திய நுண்ணறிவு பிரிவில் ( அமலாக்கம்) காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 2023 - ம் வருடம் விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தேன் என்றும், அப்போது வெள்ளத்தங்கம் என்பவர் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தார் என்றும், அவரது கையெழுத்து தனக்கு நன்கு பரிட்சயம் என்றும், கடந்த 23.12.2023 ம் தேதி அவர் நிலையத்தில் இருந்தபோது, விழுப்புரம் மாவட்டம் அற்புசம்பாளையம் கிராமத்தை சேர்ந்த நாகப்பன் மகன் தவசி என்கிற சுரேந்தர் நிலையம் ஆஜராகி கொடுத்துக்கொண்ட எழுத்து மூலமான புகாரை காலை 9.00 மணிக்கு பெற்று நிலைய குற்ற எண்.600/2023 இ.த.ச.பிரிவுகள் 341, 323, 397, 506(2) -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், அவர் பெற்ற புகார் அ.சா.ஆ.5 என்றும், அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 என்றும், அந்த புகாரில் மேற்படி நபர் 22/12/2023-ம் தேதி இரவு சுமார் 7.00

மணியளவில் இருசக்கர வாகனத்தில் வந்தபோது, சின்னபாபு சமுத்திரம் ஆர்ச் அருகில், பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த அறிவு என்கிற அறிவழகன் த/பெ.தாண்டவராயன், சின்னபாபு சமுத்திரம் என்பவர் வழிமறித்து கத்தியை காட்டி மிரட்டியும், கன்னத்தில் அறைந்தும், பாக்கெட்டில் இருந்த ரூ.200/-யை வழிப்பறி செய்ததாக சொல்லப்பட்டிருந்தது என்றும், மேற்படி புகாரையும், அச்சு முதல் தகவல் அறிக்கையும் சேர்த்து முறையாக நீதித்துறை நடுவர் எண்.2 விழுப்புரம் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். ஒரு பிரதியை மேலதிகாரிகளுக்கும், மற்றொரு பிரதியை விசாரணைக்காக தன் பார்வைக்கு வைத்ததை தான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, புகார்தாரர் சுரேந்தர், சம்பவ சாட்சி அய்யனார், மற்றும் ஒரு சாட்சி இராமமூர்த்தி ஆகியவர்களை விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சம்பவ இடம் சென்று சாட்சிகள் நடராஜன், ராஜேந்திரன், ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடம் குறித்து முடிவு செய்ய 23 ம் தேதி காலை 10.00 மணியளவில் ஒரு பார்வை மகசரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தேன் என்றும், பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், தான் தயார் செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.7 என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 என்றும், பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை தேட தன் ரகசிய புலனாளி தனக்கு தந்த ரகசிய தகவலின் பேரில், அன்று மதியம் 1.00 மணியளவில் சின்னபாபு சமுத்திரம்

பஞ்சாயத்து அலுவலகம் அருகில் நின்றிருந்த எதிரி அறிவு என்கிற அறிவழகனை ரகசிய புலனாளி மற்றும் சாட்சி அடையாளம் காண்பிக்க காரணம் கூறி மதியம் 1.05 மணிக்கு கைது செய்தேன் என்றும், கைது விவரத்தை அவரது மனைவி மகேஸ்வரிக்கும், இலவச சட்ட அலுவலக வழக்கறிஞர் திரு.பிரேம்குமார் அவர்களுக்கு தெரியப்படுத்தினேன் என்றும், பின்பு சம்பவம் குறித்து அவரை(எதிரியை) விசாரணை செய்ய, அவர் எந்த வற்புறுத்தலும், துன்புறுத்தலும் இன்றி தானாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக் கொண்டார் என்றும், அதை சாட்சிகள் ஏழுமலை த/பெ.முனுசாமி, தண்டபாணி த/பெ.முருகேசன், ஆகியோர்கள் முன்னிலையில் அன்று 1 - 15 மணிக்கு பதிவு செய்தேன். பின்பு எதிரி, சாட்சிகளிடம் அதில் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால், சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9 என்றும், பின்பு மதியம் 2-10 மணியளவில் அதே சாட்சிகள் முன்னிலையில் பஞ்சாயத்து அலுவலகம் அருகில் இருந்து ஆஜர் செய்த ஒரு பச்சை, கருப்பு, சிமெண்ட் கலர் பேனா கத்தி ஒன்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.10 என்றும், அந்த கத்தியை பார்த்தால் தன்னால் அடையாளம் கூற முடியும் என்று சாட்சி கூறினார் என்றும், சாட்சி அதை சரியாக அடையாளம்

காண்பித்தார் என்றும், அந்த கத்தி சா.பொ.1 என்றும், பின்பு எதிரி மற்றும் சான்று பொருளுடன் நிலையம் வந்து எதிரியை பாராவிடம் ஒப்புவித்து பின்பு உச்சநீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி முறையாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்பு தன் விசாரணையில் புகார்தாரரின் கன்னத்தில் எதிரி அறைந்ததாக புகாரில் சொல்லப்பட்டிருந்தது என்றும், ஆனால் காயம் எதுவும் இல்லாததாலும், மருத்துவரிடம் சிகிச்சை எதுவும் பெறாததாலும், இ.த.ச. பிரிவுகள்,341, 323, 397, 506(2) -ல் இருந்து 341, 352, 397, 506(2) -ன் கீழ் ஒரு பிரிவு மாற்ற அறிக்கை தயார் செய்தேன் என்றும், அந்த பிரிவு மாற்ற அறிக்கை அ.சா.ஆ.11 என்றும், வழக்கு சொத்தினை படிவம் 95, மற்றும் அனைத்து ஆவணங்களையும், நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், மேற்படி படிவம் 95 அ.சா.ஆ.12 என்றும், உதவி ஆய்வாளர் திரு.வெள்ள தங்கம் என்பவர் விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பிறகு தன் விசாரணை முடித்து, எதிரி அறிவு என்கிற அறிவழகன் த/பெ.தாண்டவராயன் என்பவர் மீது இ.த.ச. பிரிவுகள் 341, 352, 397, 506(2) -ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், அத்துடன் மற்ற ஆவணங்கள் அனைத்தையும் முறையாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், தன் விசாரணையில் சாட்சி சுரேந்தர் தான் பாதிக்கப்பட்ட விவரத்தையும், காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துக் கொண்டது பற்றியும் தன் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும், சாட்சி அய்யனார் சுரேந்தருக்கு அனுசரனையாக சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக தான் தன் விசாரணையில்

சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும், சாட்சி நடராஜன் நான் சம்பவ இடம் சென்று பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தபோது உடனிருந்து தானும், ராஜேந்திரன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும், சாட்சி தண்டபாணி எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்த போதும், கைப்பற்றுதல் மகசர் தயார் செய்த போதும், தானும், ஏழுமலையும், உடனிருந்து அவைகளில் கையொப்பம் செய்ததாக தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) இந்த வழக்கில் முக்கிய சாட்சிகளான அ.சா.1புகார்தாரர் , அ.சா.2 கண்ணுற்ற சாட்சி ஆகியோர் பிறழ்சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்கள். மற்ற முக்கிய சாட்சியான பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்படவில்லை. எனவே அ.சா. 5 காவல்துறை அதிகாரியின் சாட்சியமும், அரசு தரப்புக்கு எந்த அனுகூலத்தையும் ஏற்படுத்தவில்லை என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் மூலமும் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(iii) இந்த வழக்கில் முக்கிய சாட்சிகள் அனைவரும் பிறழ்சாட்சிகளாக மாறியுள்ள நிலையில், வழக்கின் பொருண்மைகள் அனைத்தும் சங்கிலி தொடர் போல தெளிவாக

அமைந்துள்ளது என்ற முடிவிற்கு இந்த நீதிமன்றத்தால் வர இயலவில்லை. எனவே சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியங்கள் ( Circumstantial evidence) மூலமும் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை கண்டறிய இயலவில்லை.

எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், பெரியபாபு சமுத்திரம் கிராமம், ஆர்ச் கேட் அருகில் 22.12.2023 ம் தேதி இரவு சுமார் 07.00 மணியளவில் 1வது சாட்சியான தவசி (எ) சுரேந்தர் என்பவர் தனது இருசக்கர வாகனத்தில் ஆழியூரில் உள்ள தனது சித்தப்பா வீட்டிற்கு செல்ல வந்து கொண்டிருந்தபோது எதிரியாகிய அறிவழகம் சாட்சி.1 யை வழிமறித்து டேய் பாக்கெட்டில் எவ்வளவு பணம் வச்சிருக்க எடுடா என மிரட்டியும், அதற்கு 1வது சாட்சி தன்னிடம் எதுவுமில்லை என்று கூறியதும், உடனே சாட்சி 1ன் கன்னத்தில் கையால் அறைந்து சாட்சி 1க்கு ஊமைக்காயத்தை ஏற்படுத்தியும், எதிரி சாட்சி. 1 யை பார்த்து நானே பெரிய ரவுடி என்னிடமே பொய் சொல்றியா என கூறிக்கொண்டே கையில் வைத்திருந்த சிறிய கத்தியை காட்டி மிரட்டி சாட்சி.1ன் பாக்கெட்டில் கையை விட்டு ரூ. 200 /- பணத்தை பிடுங்கி வழிப்பறி செய்தும், யாருக்கிட்டேயாவது போய் சொன்ன இந்த கத்தியாலேயே உன்ன குத்தி கொலை பண்ணிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தும் குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது இதச . 341, 323, 397, 506(2) பிரிவின் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் இவ்வாறாக பிரச்சனை எண்.1 க்கு தீர்வு காண்கிறது.

முடிவாக , எதிரி மீது இதச பிரிவு . 341, 323, 397, 506(2) ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு . 235 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறேன். இவ்வழக்கில் எதிரிக்கு ஏற்பட்டுள்ள பிணைமுறிகள் மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்புக்கு பின்னர் இரத்தாகும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

சான்று பொருள். 1 கத்தி பயனற்றது என்பதால் அதனை மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்புக்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

RAJASIMMAVARMAN S

Digitally signed by RAJASIMMAVARMAN S
Date: 2026.03.30 10:43:21 +0530

கூடுதல் அமர்வு நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்),
விழுப்புரம்.

**அரசுத்தரப்பு சாட்சிகள் -**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திரு. சுரேந்தர் |
| 2 | அ.சா.2 | திரு. அய்யனார் |
| 3 | அ.சா.3 | திரு. நடராஜன் |
| 4 | அ.சா.4 | திரு. தண்டபாணி |
| 6. | அ.சா.5 | திரு . நடராஜன் ( காவல் ஆய்வாளர் ) |

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள் -**

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | 23.12.2023 | புகாரில் உள்ள கையெழுத்து |
| 2 | அ.சா.ஆ.2 | 23.12.2023 | பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து |
| 3 | அ.சா.ஆ.3 | 23.12.2023 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து |
| 4 | அ.சா.ஆ.4 | 23.12.2023 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து |
| 5 | அ.சா.ஆ.5 | 23.12.2023 | புகார் |
| 6 | அ.சா.ஆ.6 | 23.12.2023 | முதல் தகவல் அறிக்கை |
| 7 | அ.சா.ஆ.7 | 23.12.2023 | பார்வை மகசர் |
| 8 | அ.சா.ஆ.8 | 23.12.2023 | மாதிரி வரைபடம் |
| 9 | அ.சா.ஆ.9 | 23.12.2023 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| 10 | அ.சா.ஆ.10 | 23.12.2023 | கைப்பற்றுதல் மகசர் |
| 11 | அ.சா.ஆ.11 | 23.12.2023 | பிரிவு மாறுதல் அறிக்கை |
| 12 | அ.சா.ஆ.12 | 23.12.2023 | படிவம். 95 |

**அரசு தரப்பு சான்று பொருள் .சி.பி.** 43/2025

1. சா.பொ.1 .. கத்தி

**எதிரி தரப்பு சாட்சிகள்** - இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்** - - இல்லை.

| Case Summary | | | | | |
|---|---|---|---|---|---|
| SL.No. | Description | Details | | | |
| 1 | எதிரி அடைப்பு காவலில் இருந்த காலம் . | எதிரி . 23.12.2023 முதல் 03.02.2024 வரை | | | |
| 2 | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கலான நாள் | 10.01.2024 | | | |
| 3 | வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்ட நாள் | 11.07.2025 | | | |
| 4 | எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | 08.09.2025 | | | |
| 5 | வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பல்வகை மனுக்களும் அவற்றின் முடிவும் (கு.வி.மு.ச. பிரிவு 317-ன் கீழான மனு நீங்கலாக ) | NIL | | | |
| . | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சி | மு.வி | கு.வி | |
| | | அ.சா.1 | 02.02.2026 | 02.02.2026 | |
| | | அ.சா.2 | 04.03.2026 | 04.03.2026 | |
| | | அ.சா.3 | 04.03.2026 | 04.03.2026 | |
| | | அ.சா.4 | 04.03.2026 | 04.03.2026 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.சா.5 | 13.03.2026 | 13.03.2026 |
| 7 | எதிரியை கு.வி.மு.ச பிரிவு 313 ன் கீழ் வினவப்பட்ட நாள். | 16.03.2026 | | |
| 8 | எதிரி தலைமறைவாக இருந்த காலம் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜரான / ஆஜர்படுத்தப்பட்ட காலம். | NIL | | |
| 9 | மேல் நீதிமன்றங்கள் வழங்கிய ஸ்டே உத்தரவு மற்றும் அதன் முடிவும். | இல்லை | | |

RAJASIMMAVARMAN S

Digitally signed by RAJASIMMAVARMAN S
Date: 2026.03.30 10:43:33 +0530

கூடுதல் அமர்வு நீதிபதி,

(விரைவு நீதிமன்றம்),

விழுப்புரம்.

அசல் / நகல் தீர்ப்பு

அமர்வு வழக்கு எண். 145/2025

நாள். 17.03.2026.